THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W.1 )**

Solemnly affirmed and sworn by Tmt.Nagavalli Grade III Bench clerk on 26.07.2023. in accordance with the provisions of Act XX111.

RLT.OP. NO. 11/2022

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அலமேலு | தாலுகா | |
| தகப்பனார் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | இந்து |
| வயது | | | |

ம.சா. 1 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் மனுதாரர் மற்றும் மனுதாரர் தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே.

எனது பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**12.12.2008 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனது பெயரில் உள்ள வீட்டுவரி ரசீதுகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**மனுதாரர் பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் (எண்ணம் 14) ம.சா.ஆ.2 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது**).

எதிர்மனுதாரர் என் மீது தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 117/2022 வழக்கின் பிராது நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**அசல் வழக்கு எண். 117/2022 வழக்கின் பிராது நகல் ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

எதிர்மனுதாரர் எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**02.05.2022 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நான் எதிர்மனுதாரரின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**06.05.2022 ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு நகல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அதற்கு எதிர்மனுதாரர் எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**09.05.2022 ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

எதிர்மனுதாரர் அசல் வழக்கு எண்.117/2022 ல் தாக்கல் செய்த வாடகை ஒப்பந்தத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**அசல் வழக்கு எண். 117/2022 ல் தாக்கல் செய்யப்பட்ட வாடகை ஒப்பந்தத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

நான் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**20.07.2022 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் ம.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). எதிர்மனுதாரர் எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். **(30.07.2022 ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

நான் எதிர்மனுதாரர் மீது காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன்.(**புகார் மனு ம.சா.ஆ-10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நான் கொடுத்த புகார் மனுவிற்கு காவல் நிலையத்தில் கொடுத்த மனு ரசீதை எனது தரப்பு

ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**20.07.2022 ம் தேதியிட்ட மனு ரசீது ம.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி புகாரின் அடிப்படையில் காவல் நிலையத்தில் இருந்து விசாரணைக்காக அழைக்கப்பட்ட அழைப்பாணையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**திருநகர் காவல் நிலைய அழைப்பாணை ம.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

தாவா சொத்திற்கான எனக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையேயான வாடகை ஒப்பந்தத்தின் நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**மேற்படி ஆவணம் நகலாக இருப்பதால் குறியீடு செய்வதற்கு எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மேறப்டி ஆவணத்தின் உண்மைத்தன்மை குறித்து ஆவணத்தின் மதிப்பீட்டலின்போது முடிவு செய்யப்படும் என்பதால் மேற்படி ஒப்பந்தத்தின் நகல் ம.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

(எதிர்மனுதாரரின் வேண்டுகோளின்படி ம.சா.1 குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).